ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

**सुखतः क्रियते रामाभोगः पश्चाद्धन्त शरीरे रोगः ।**
**यद्यपि लोके मरणं शरणं तदपि न मुंचति पापाचरणम् ॥**

**सुखतः** - சுகமிருக்கென்கிற தோற்றத்தால்

**रामा भोगः** - ஸ்திரீயினிடத்தில் போகமானது

**क्रियते** - செய்யப்படுகின்றது

**पश्चात्** - பிறகு

**शरीरे** - சரீரத்தில்

**रोगः** - ரோகமானது

**भवति** - உண்டாகிறது

**हन्त** - கஷ்டம்

**लोके** - உலகில் தோன்றிய பிராணிகளுக்கு

**मरणं** - மரிப்பதானது

**शरणं यद्यपि** - அவசியம் அடையத்தகுந்ததே

**तदपि** - அவ்விதமிருப்பினும்

**पापाचरणं** - பாபத்திற்குக் காரணமான கெட்ட கர்மாக்களின் செய்கையை

**न मुंचति** - விடுகிறதில்லை.

ஸம்ஸார ஸம்பந்தமான எவ்வித துக்கங்களுக்கும் ஸ்திரீகளிடத்திலிருக்கும் மோஹமே முதற்காரணம். இதானது வித்வான்களைக்கூட விடாமல் ஹிம்ஸிக்கிறது. ஆகையால் அதின் ஸ்வரூபத்தைப் பிரத்யேகமாய் விசாரித்து உண்மையிலிருக்கும் தோஷத்தை இதினால் அறிவிக்கிறார்.

ஒரு காரியத்தில் பிரவிருத்திப்பவன் திருஷ்டம் அதாவது பிரத்தியக்ஷ பலன் அதிருஷ்டம் அதாவது பரலோகத்திலுள்ள பலன். இவ்விரண்டிலொன்றையோ அல்லது இரண்டையுமோ எதிர்பார்க்கலாமேயன்றி வேறு கிடையாது. ஸ்திரீபோகத்தில் இச்சைகொண்டு கண்டவிடங்களில் பிரவேசிப்போருக்கு யாது பலன் என்று விசாரிக்கும்பக்ஷத்தில் ஒருவிதமுமில்லை என்பதோடு பிரத்தியக்ஷத்தில் கண்டவிடங்களில் தோன்றியபடி பிரவேசிப்பதால் ரோகமேற்பட்டு கஷ்டப்படுகிறான். நிச்சயமாய் மரணத்தையும் பாபத்தைச் செய்தால நரகதுக்கங்களையும் அனுபவிக்க வேண்டியவன். சாஸ்திரவிரோதமான கெட்டகாரியங்களைச் செய்தால் பரலோகத்திலும் கஷ்டங்களையும் அனுபவிப்பதைத் தவிர வேறு யாதொரு பலமுமில்லை. ஆகையால் இதை நன்கறிந்து ஸ்திரீவிஷயமான போகத்தைவிட்டு மோக்ஷ சுகத்தைப் பெறுவதற்குற்ற ஸாதனங்களை அனுஷ்டிக்கவேண்டுமாய் போதிக்கிறார்.

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
க்ஷய-ஹூ ஆவணி-மீ ௧௦௨

# வேதாந்த சித்தாந்தம்.

(384-ஆவது-பக்கத் தொடர்ச்சி.)

12. பின்னும் இவ்வித அத்வைத பிர்மஞானமில்லாமல், புண்ணியங்களையும், பாவங்களையும் செய்பவர்கள் சுவர்க்க நரகங்களை யடைகின்றார்கள். நாம் கண் கூடாகக்காணும் உலகங்கள் யாவும் அசத்துக்களெனச் சொல்லத் துணிந்தவர்கள், தமக்குமுற்றிலும் புலப்படாத சுவர்க்க நரகங்களுண்டென்று எங்ஙனந்துணிந்தார்களெனின், வியவகாரதசையில் உலகமனைத்தும்சத்தியமென ஒப்புக்கொள்வதாலும், "இவ்வுலகம் உண்டு மறு உலகமில்லை என்றுரைப்பவன் அடிக்கடி என் வசமாகுபவன்" என்று நமன் வாக்யம் காணப்படுதலாலும் சுவர்க்க நரகமுண்டென்பது வெளியாயிற்றென்க.

13. பிரகதாரண்யோபநிடதத்தில் "ஆன்மாவைக்காண்டலும், கேட்டலும், தியானித்தலும வேண்டும். நிஷ்டையிலமைக்க வேண்டும்" என்று ஆன்மாவை அபரோக்ஷமாகக்காண்டற்கு விதிக்கப்படும் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் ஆகிய மூன்றும் உலகத்திலுள்ள எல்லாவித முமுக்ஷுக்களையும் பற்றியெழுந்தனவோ, அன்றிச் சில முமுக்ஷுக்களைப் பற்றி மட்டுமெழுந்தனவோ என்று ஓர் ஆசங்கை நிகழுங்கால், உத்தமனாய், ஜன்மாந்திர புண்ணிய வசத்தாற் கன்மசேஷங்களனைத்துமொழிந்து தெளிந்த சித்தத்தையுடைய ஓர் வகை யதிகாரிகட்கு, ஓர் கால் மகாவாக்கியார்த்தங்கேட்ட மாத்திரையே அபரோக்ஷான்ம சாக்ஷாத்காகாரம் சித்திக்குமாதலின் இம்மூவகை விதிகளும் ஏனைய மந்தாதி

காரிகட்கென்றே தெளிதல் வேண்டும். அவ்வித அதிகாரிகட்கே பரப்பிரமாகார வாசனை அடிக்கடி மாறுதிருத்தற் பொருட்டுத் தியானுப்யாசம் வேண்டியதாம். ஆதலின், சிலவகை அதிகாரி களை நோக்கியே இவ்வாக்கியம் எழுந்ததென்னலே யுசிதமா மென்க. இவ்விஷயமே ஸ்ரீமதாசாரிய சுவாமிகள் பாஷியத்தில் வற்புறுத்தி நிலை நாட்டப்பட்டது. சாந்தோக்கியோபநிடதத்தி லே சுவேதகேதுவைக குறித்து ஒன்பது முறை மகாவாக்யோப தேசம் புரிந்தது நிதித்தியாசனம் போன்றதாதலின் அதுமந்தாதி காரத்தை நோக்கியேயாம். ஓர் முறை மகாவாக்கியத்தைக்கே ட்டு, அதனுல் அந்தக்கரண விருத்தியொழிந்து தன்மயனுகும் உத்தம புருஷனுக்குப் பன் முறை யுபதேசிக்கவேண்டிய ஆவசி யகமில்லை. உலகத்திலே நெல்லை உமி நீங்கிய பின்னர்க் குத்து பவருண்டோ? உலகத்தில் மடமை, சந்தேகம், விபரீதம் முத லியவற்றை யொழித்தற்கன்றோ சிரவணுதிகள் விதிக்கப்படுகின் றன. ஜன்மாந்திர புண்ணிய வசத்தால் நிர்மல சிததனுக்கு ஓர் காற் கேட்டதே போதியாதாதலின், அவனிடத்தில்இவையெல்லாம் பயன் படாவாம். அன்றியும், விதிவிலக்குகள் கன்மங்களிலேய ன்றி மற்றவிடம் அஃதாவது பிரமத்தினிடம் பொருநதாமையால் இம்மூன்று விதிககளும் எங்ஙனம நிலை பெறுமெனில் இவைவி திகள் போலத் தோன்றினும் விதிகளன்றென்பது கருதமென்க, [விதியென்பது வேறு பிரமாணங்களால் அறிதற்கியலாத வொன் றனை எடுத்துரைபபது. அநுவாதமென்பது வேறு பிரமாணங்க ளாலறியத்தக்கதை எடுத்துப் பின்னுரைத்தல்.] இதனுல் அஃத நுவாதமென்பதே துணிபாயிற்று. கன்ம விஷயததில் விதியைக் கையாடும் சுருதி என் பிர்மவிஷயத்தில் விதிக்காதெனின், கன்ம காண்டம், ஞானகாண்டம், இவ்விரண்டிற்கும் விஷயம், பிரயோஜ னம், சம்பந்தம, அதிகாரி இவைகள் வேறுபட்டிருப்பதால், அங் ஙனங் கூறல் பொருந்தாது.

மேலும், சாலோக்கியம், சாமீப்யம், சாரூப்பியம், சாயுச்சி யம் என்னும் நால்வித முத்திகளிலும், வேருய் ஐந்தாவதான கை வல்ய முத்தி இருவகைப்படுமென்று சாஸ்திரங்கள் கூறுகிற்கும்.

கிரமமுத்தி ஒன்று உடன்முத்தி ஒன்று. அவற்றுள் முதன் முத்தியாகிய கிரமமுத்தியென்பது வேதாந்தங்களை அறிந்து மெய்ப்பொருளுணர்ந்து சந்நியாசத்தாற் சத்துவகுணம் மேலிட்ட எதிகள் பிரமலோகஞ் சென்று பிரமனுடன் முத்தியுடைகின்றார்கள் என்றும், "ஹிருதயத்தில் நூற்றொரு நாடிகள்" என்றும் போன்ற வசனங்களால், பிரமலோகக்கிரமமாய்ப் போகும் வழியால் கிடைப்பது. இரண்டாவது "இவ்விடமே பிரமத்தையடைவான்" "இவ்விடமே உண்மையிற் கலப்பன்" என்றற்றொடொப்பதக்க வசனங்களாலும் இச்சரீரமிருக்கும் காலத்தே பரம் பொருளையறிவானேல் எனப்போன்ற வசனத்தாலும் வெளியாகின்றபடி உயிருடனிருக்கும் காலத்திலேயே உண்டாவது.

தொடரும்.

உபபத்திராதிபர்.

---

# தீண்டாமைக்கு வகாலத்து.

இப்பெயர் சாற்றி ஆகஸ்ட் 2 ம் தேதி மித்திரன் பேபரில் ஓர் விஷயம் வரையப்பட்டிருக்கிறது. அதுவும் ஓர் பண்டிதர் தென் இந்திய தேசபாஷைப் பத்திரிகையில் எழுதியிருந்த வியாஸத்தைத் தெரிந்துகொண்டு அதற்கு மறுப்பாக காந்தி யெளவன இந்தியா பத்திரிகையில் எழுதியிருப்பதாகக் கூறுகிறது. இங்கு விஷயமின்னதென்பதை அறியுமுன் தெரியப்படுத்த வேண்டியது ஒன்றுண்டு. தேசபாஷைப் பத்திரிகையென்றால் சுதேசமித்திரன் ஒன்று மட்டுமா, அப்படித்தானென்றால் பொதுவாய்க் கூறுவதைக் காட்டிலும் சுதேசமித்திரனென்றே சொல்லலாம். மற்ற பத்திரிகையும உண்டென்றால் வாரப்பத்திரிகையான நம் ஆரியதர்மத்தையும் பொருட்படுததலாகாதா. அவ்விதம் செய்யின் நாட்டுக்கு நல்காலம் பிறந்துவிட்டதெனலாம். ஏனெனில் ஆரியதர்மம் மதவிஷயமொன்றேயே சாஸ்திரம் வழுவாது கூறும் தன்மை

பெற்றது. அப்பத்திரிகையிலுள்ள விஷயத்தை மித்திரன் அப்போதப்போது கண்ணுற்று அதில் காந்தியின் மொழிக்கும் அவரது தேச முன்னேற்றக் கொள்கைக்கும் மாறுபாடான விஷயம் நேரிடின் அதற்கு ஸமாதானம் அவரைக் கொண்டோ அல்லது மித்திரன்தானேயோ தன்பத்திரிகை மூலம் ஸமாதானமவெளியிட்டால் உலகில் இரு கக்ஷி நேராது. காந்தி சொல்படி ஸ்வராஜ்யம் கிட்டலாம். அவ்விதமோ இதுகாறும் செய்யவில்லை. இனியும் அவ்விதம் செய்வதாய் உத்தேசமுமில்லை. அத்தகையோரின் நோக்கம் இது. இந்த வேதசாஸ்திரங்களையே பிடித்துத்தொங்குகின்ற வைதிகர் சிலரே. இவர்களைப் பொருட்படுத்தி இவர்களது கேழ்விக்கு ஸமாதானம் சொல்லவேண்டாம். இவர்களுக்கு இரண்டொரு காசைக் காட்டினல் சொன்னபடி கூத்தாடும் என்பதே இம்மனப்பாலை இத்தகையோர் இன்னும் எத்துணை நாள்சாப்பிட்டுத் தாகசாந்தியடைவார்களோ. ஆனால் உண்மையில் எங்களை அலக்ஷியம் செய்வதுபோல் நடக்கினறனரே யொழிய வேறல்ல. உண்மையில் எங்களது கேழ்விகளுக்கு ஸமாதானம் சொல்லக்கொஞ்சமேனுமியலாது.

சின்னாட்களுக்கு முன் திருவனந்தபுரத்திலிருந்து ஓர் பண்டிதர் காந்தியைச் சில கேழ்வி கேட்டார். அக்கேழ்விகளைப் பெரிய உத்தியோகஸ்தர்கள் மூலமாய் காந்திக்கு அனுப்பியதுமன்றி மித்திரனிலும் பிரசுரிக்குமாறு அனுப்பினர். அதைப் பத்திராதிபர் என்பவர் பிரசுரிக்க வேண்டியிருக்க மிக மனம் கசந்து அதைப் பார்த்து பதிற்கூற நம்மாலுமியலாது, காந்தியாலுமில்லை யென்பதை அறிந்து கிட்டாத திராக்ஷைப் பழத்தை சீ சீ இது புளிக்குமென்று நரி கூறியதுபோல் அக்கேழ்விகளைப் பெரிய மனிதரின் தாக்ஷிண்யத்தால் பிரசரித்துக்கடைசியில் இந்த அஸங்கதர்ப்பமான கேழ்விகளுக்கு நாம் பதிற்கூறத்தயாராயில்லையென்று அபிப்பிராயம் எழுதிவிட்டார். பாருங்கள்! பத்திராதிபருக்கு எது ஸந்தர்ப்பமோ தெரியவில்லை. இதிருக்கட்டும் காந்தியாவது பதில் எழுதினரோவென்றால் இல்லை இல்லை. அங்கேயும் இந்த மதிப்பைத்தான் பெற்றது. உண்மை இப்படியிருக்க நம் மித்

திரன் அடிக்கடி தீண்டாதவர்களைத் தள்ளி வைக்கத்தான்வேண்டு மென்று சில விஷயங்களோடு தனக்கு சில பண்டிதர் எழுதுவது போலும் அதற்கு காந்தி யௌவன இந்தியாவில் இம்மாறு பதிற் கூறிவிட்டாரென்றும் வீசுகிறார். இதை பார்க்கும் ஸாமான்யஜனங் கள் ஆஹா! பண்டிதர்கள் என்ன கேழ்வி கேட்டாலும் காந்தி பதிற் கூறிவிடுகிறார். அதற்குமேல் ஒன்றும் கிளம்பவில்லை. ஆக வே சாஸ்திரமும் தீண்டாதஜாதி யென்பது உண்மையில் கிடையா தென்பதுதான் என்று எண்ணி விடுகிறார்கள். இவ்வித மகேந்தி ஜால நடவடிக்கைகளில் முன் குறிப்பட்ட தேதியில் வெளிவந்து ள்ள மித்திரன் ஸமாசாரத்தைச் சற்று கவனிப்பாம்.

இக்கூட்டத்தார்கள் எறும்பூரக் கல்லும் தேயும் என்ற பழ மொழிக்கிணங்க அடிக்கடி பேபர்களின் மூலமாய்இவ்விஷயத்தைச் சொல்லிக்கொண்டிருந்தால் நாளடைவில் கார்யஸித்தியாய்விடும் என்பது முக்கிய நோக்கம் அவ்விதமே பலித்து விடும். காலஸ் வபாவத்தினால் வர்ண தர்மம் அழியும் நாஸ்திக்யமே மேலிடும் என்பதே சாஸ்திரங்களின் கொள்கை. பாருங்கள்! இவ்வண் ணமே இப்போது உலகில் உத்தம குலத்தவர்களும் வைதிகாசார ங்களைத் துலைத்துவிட்டுப் பாமரர்களாய்த் திரிபவர்கள் பலர். அவர் களுக்கு இன்னும் இவர்களது உபதேசம் காதில் படவேயில்லை. அத்தகையோர்களுக்கு இவர்களது உபதேசம் பட்டால் அவர்கள் எவ்விதமாவார்களோ இது போகட்டும். வீண் விசாரம் வேண் டாம். பிருகிருதத்தை அநுஸரிப்பாம். ஓர் படித்த பண்டிதர் இவ் வண்ணம் கூறுகின்றனராம்.

1. ஆதிசங்கரர் ஒரு ஸமயத்தில் ஒரு சண்டாளனைப் பார் த்து விலகிப்போகும்படி சொன்னார். திரிசங்கு சண்டாளனாக பாவிக்கப்பட்ட பிறகு அவனை எல்லோரும் பிரஷ்டம் செய்தார் கள். இதிலிருந்து வெகு காலமாகத் தீண்டாமை இருந்துவருகி றது புலப்படுகிறது.

2. சண்டாளர் ஆரிய சமூகத்திலிருந்து விலக்கிவைக்கப் பட்டவர்கள்.

3 தீண்டாதவர்களே தீண்டாமையிலிருந்து விடுபட்டிருக்கவில்லை.

4. மிருகங்களைக் கொல்வதும் மலங்களை எடுப்பதும் எலும்புகள் மாமிசம் முதலியவற்றைக் கையாளுவதும் தீண்டாதவர்களுடைய தொழிலாயிருக்கின்றன.

5. மாடுவெட்டும் தொட்டிகள் கள்ளுக்கடைகள் விபசாரி வீடுகள் முதலியவற்றை விலக்குவதுபோலத் தீண்டாதவர்களும் விலக்கி வைக்கப்படவேண்டும்.

6. மறுமையிலும் அவஸ்தைப்படாதிருப்பதற்கான உரிமைகளை மட்டும் தீண்டாதவர்களுக்கு மறுக்காதிருந்தால்போதும்.

7. ஒரு காந்தி தீண்டாதவர்களைத் தொட்டுக்கொள்ளலாம். ஆனால் அதே காந்தி உபவாஸமும் இருக்கமுடிகின்றது. ஸாமான்யராகிய நாங்கள் இரண்டும் செய்யமுடியாது.

8. மனிதருடைய வளர்ச்சிக்குத் தீண்டாமை அவசியம்.

9. மனிதனிடத்தில் ஒரு காந்த சக்தி இருக்கின்றது. அது பாலுக்குச் சமானம் ஒழுங்கற்ற ஸாமான்களோடு சம்மந்தப்பட்டால் அது கெட்டுவிடும். கஸ்தூரியையும் வெங்காயத்தையும் சேர்த்து வைப்பதுண்டா. அதுபோல் பிராமணர்களையும் கலக்கச் செய்ய முடியாது.

இவ்விதம் படித்த பண்டிதர் கேட்டாராம். இதற்கு காந்தி யெளவன இந்தியாவில் எழுதினராம். அதை மித்திரன் பிரசுரித்தாராம். என்ன வேலை பாருங்கள். இந்த அற்புதக் கேழ்வி கேட்டவர் படித்த பண்டிதராம். என்ன படித்த பண்டிதரோ தெரியவில்லை. ஸம்ஸ்கிருதம் படித்த பண்டிதராயின் அவர் வர்ணுசிரம தர்மத்தின் அந்தரங்க தாத்பர்யத்தை அறிந்தவராய் லோகோபகாரத்திற்கென்றே அவதரித்த மகரிஷிகளின் மகிமை நன்கு தெரிந்திருக்குமாயின் வேத சாஸ்திரங்களில் கபடமற்ற பக்தியுடையவராகில் இவ்விதம் ஸாமான்யம் சொல்லும்சோம்பி வார்த்தையைக் கேழ்விகளாகக் கேழ்க்க நியாயமிராது. ஆகவே இது

காந்தி கோஷ்டியிலேயே ஒரு கேள்வியென்று கிளப்பி பண்டிதர் என்று பெயர் போடப்பட்டிருக்கவேண்டும்.

இதில் லெக்கமிட்டு 9. கேள்விகளென்று வகுக்கப்பட்டிருப்பவைகளில் ஸாரத்தை ஆராய்வாம். முதற் கேள்வி மிகவும் பொருத்த முடையதுதான்,

இரண்டாவதில் சண்டாளர் ஆர்யஸமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள் என்றிருக்கிறது. இது முழு மோசம். ஆரிய ஸமூகம் என்பது என்னவென்றுவது இவர் தெரிந்திருப்பாரா? இதிலிருந்து யார் விலக்கி வைத்தார் காரணம் யாது எவ்வளவு நாளாகிறது எனறால் விடையளிப்பாரா. உண்மையில் சண்டாளர் விலக்கி வைக்கப்பட்டவர்களல்ல. அவர்களும் ஆரியர்களே ஆகையால் ஆர்ய ஸமூகத்திலவர்கள் அகப்பட்டவர்கள் தான்.

இனி மூன்றுவது கேள்வி ஆபாஸம் தான். தீண்டாதவர்கள் தீண்டாமையிலிருந்து விடுபட்டிருக்கவில்லை யென்கிறார். தீண்டாதவர்கள் அதிலிருந்து எவ்விதம் விலகுவார்கள். ஒரு நாளும் ஆகாத காரியம். தீண்டாமையென்றால் அது ஒருவேலியா அதைத் தாண்டுவதெப்படி ? ஒருபோதும் இயலாது.

நாலாவது கேள்வி அர்த்தமுள்ளதல்ல. ஏனெனில் தீண்டாதவர்களைத் தவிர மற்றவர்கள் மிருகங்களைக் கொல்வதில்லையா மாமிசம் தின்னும் ஸவபாவமுடைய ஜாதியோர் எல்லோரும் தீண்டாதவர்களா ? மலங்களை எடுப்பது வேறு ஜாதிக்கும் ஸ்வபாவந்தான். அவர்களை அவ்வளவு தீண்டாதவர்களாய்ப் பிரகாசிப்பதில்லை.

ஐந்தாவதில் சொல்லும் காரணங்கள் இவர்களுக்குஒவ்வாது. இதில் சொல்லும் உபமானங்கள் மிகவும் யாவராலும் விலக்கப்படவில்லை. தவிர அங்கு ஏற்பட்டிருக்கும் ஆபாஸக்காரியங்களை நம்மால் விலக்க முடியும். அதன் பிறகு நாம் அவைகளைக்கைபாளலாம். அதுபோல் இங்கு நாம் விலக்கும் குணங்கள ஒன்றுமில்லை பிறப்பிலேற்பட்ட அச்சரீரம் ஒன்றே விலக்கத்தக்கதுதான். விலக்கத்தக்க குணம் என்று ஒன்றிருப்பின் உலகில் வருணதர்மமே

வேண்டாம். எல்லோரும் ஒரே பிராமணனென்றுவது வேறொரு பெயராவதிருக்கலாம். அந்தந்த ஜாதிக்கேற்பட்ட குணங்களை மாற்றிவிட்டால் அதனுல் ஜாதியும் மாறிவிடாது. குணம் மனதைப் பொறுத்தும் ஸகவாஸத்தைப் பொறுத்தும் சேர்க்கையைப் பொறுத்தும் மாறிக்கொண்டே இருக்கும். அதற்காக ஜாதியையும் அப்போதப்போது மாற்றுவதுண்டோ. இதற்கு விரிவு நமது வர்ணுசிரம தர்மமென்னும் புஸ்தகத்தில் இருப்பதால் இங்கு வேண்டாமென்று விடுகிறோம்.

பிறகு ஆறுவதில் மறுமையிலும் அவஸ்தைப்படாதிருப்பதற்கான உரிமைகளை மட்டும் தீண்டாதவர்களுக்கு மறுக்காதிருந்தால் போதும் என்பது. இந்தக் கேழ்வியை ஸம்ஸ்கிருதம் படித்த பண்டிதராய் இருந்தால் கேட்டிருக்கமாட்டார். ஏனெனில் மறுமை என்பதின் ஸ்வரூபம் தெரிந்திருந்து அதை அடையும் வழியும் அறிந்து தனக்கு அவஸ்தைப் படாமல் போவதற்கு வழி தேடிக்கொண்டவர் போலல்லவா பேசுகிறுர். இது படித்தவர்களின் ஸ்வபாவமல்ல. தாயுமானவர் முதலிய மகாஞாணிகளும் இனி எச்சன்மம் கிடடுமோவென்கிறுர். ஆசார்யாவர்களும் எனக்கு எந்த ஜன்மம் கிடைத்தாலும் என் கன்மவசத்தால் வந்துவிடட்டும். ஆனல் என்மனம் மட்டிலும் உன்னை விட்டகலாதிருக்கவேண்டுமென்கிறுர். ஆகவே பண்டிதர் ஏதோ வழி தேடிவிட்டது போலும் மற்றவர்களை அவஸ்தைப் படுத்த வேண்டாமென்றும் கருணையோடு கூறுகிறுர். உண்மையில் மறுமையில் இவர் சொல்கிற ஆர்பர் அதோகதியடையலாம். தீண்டாதவர் ஸ்வதர்மத்தை அனுஷ்டித்து உத்தமகதியடையலாம் என்பதற்கு நந்தனுர் சாக்ஷி.

பிறகு ஏழாவது பிரயோஜன மற்றதென்று விடுவாம்.

எட்டாவதில் மனிதனுடைய வளர்ச்சிக்குத் தீண்டாமை அவசியமென்கிறுர். இதற்கு என்ன அர்த்தமோ. தீண்டாமை என்பது உரம்போலாகுமோ என்னவோ. இந்த உரம்தீண்டாமை இல்லாத மனிதனுக்கா, தீண்டாதவருக்கோ.

பிறகு ஒன்பதாவதில் சொல்வதை ஒருவாறு ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே பண்டிதருடைய கேழ்விகளைப் பூர்வபக்ஷமாய்

வைத்து இவ்வளவு பதிற் கூறவேண்டியிருக்க காந்தி இதற்கு சமாதானம் சொல்வது ஒன்றும் பொறுத்தமுள்ளதாய் இல்லை என்பதைக் கவனிப்பாம்.

பண்டிதர் எவ்வளவு அழகாய்க் கேட்டிருக்கிறாரோ அவ்வளவு அழகாய் காந்தி கூறுகிறார். தீண்டாமை மகாபொல்லாததாம், ஆயிரம் தலைப் படைத்த அரக்கனுக்கே அதை ஒப்பிடலாம். ஆகையால் அந்த ராக்ஷஸன் எப்பொழுது தலையை நீட்டினாலும் அதை மண்டையிலடித்துப் போட வேண்டுமாம், பாருங்கள்! காந்தி சொல்வது சரிதான், இத்தீண்டாமை மகாபொல்லாதுதான். ஆனால் அதை அடிப்பதை மட்டிலும் வெகு சுளுவாய்க் கூறிவிட்டார். அது நமது காரியமல்ல. அதை அடிப்பவன் பரமேசுவரன். அரக்கனைக் கொல்லும் ஸ்வபாவம் ஈசனின் அம்சம் பூரணமாய் நிறைந்தவனுக்குத்தானென்றும் ஈசனின் தன்மை பொருந்தியவனின் இலக்கணம் நமது சாஸ்திரங்களிற் காணலாமென்பதையும் யாவருமறியலாம்.

பிறகு புராணங்களிலுள்ள கதைகளைத் தற்கால முறைக்குத் தக்கபடி பொருட்படுத்த வேண்டுமாம். இல்லாவிடில் அனர்த்தமாய் முடியுமென்கிறார். இதுவே சாஸ்திரங்களுடையவும் ஆசார்யர்களுடையவும் மஹிமையறிந்தவன் கூறும் வார்த்தையல்ல.

சாஸ்திரங்களில் சொல்லும் சில்லரை அம்சத்தை அனுசரித்தோ அல்லது அவற்றில் வருணிக்கப்படுகிற நபர்களின் வழியை பின் பற்றியோ நமது நடத்தையை நாம் ஒழுங்குப்படுத்திக் கொள்வதாய் இருந்தால் அந்த சாஸ்திரங்கள் மகாபடுகுழிகள். அதில் அகப்பட்டால் மாணம்தான் என்கிறார். இதுவும் ஆஸ்திகன் கூறும் வார்த்தையல்ல. சாஸ்திரங்களில் சொன்ன அம்சங்களைப் பூராவாக அனுஷ்டிக்க முடியாமற் போனாலும் கொஞ்சமேனும் அனுஷ்டிக்க வேண்டியதுதான். பிறகு மெள்ள மெள்ள அவ்வழியில் முன்னேறலாம். அதுகொண்டே மனுவும்

अनुगन्तुं सतां वर्त्म कृत्स्नं यदि न शक्यते ।
स्वल्पमप्यनुसर्तव्यं मार्गस्थो नावसीदति ॥

ஸாதுக்களது வழியைப் பின்பற்ற முழுமையும் முடியாவிடினும் கொஞ்சமேனும் பின்பற்ற வேண்டும். வழியிலிருப்பவன் கெட

மாட்டான் என்றார். ஆகையால் நமது சாஸ்திரங்களைப் படுகுழி யென்று புறமதஸ்தன் சொன்னால்அது இயற்கையெனலாம். காந்தி சொல்வதென்றால் கொஞ்சமும் நியாயமில்லை. உண்மையில் காந்தி லோகவிஷயத்தில் பாடுபடுகிறவர்தான். ஆயினும் சாஸ்திரங்களின் தத்துவத்தில்நுழைந்துகொண்டு அவரை ஒருவர்கேட்கிறதும்அத ற்குத் தெரிந்ததுபோல் தாறுமாறாய்ச் சொல்வதும் தகாத கார்ய மென்றே எனக்குத் தோன்றுகிறது. திலகர் இருக்கும் வரையில் மதவிஷயத்தில் இவ்வளவு தலையை நுழைத்துக்கொண்டதாய்த் தெரியவில்லை. இப்போதும் மதவிஷயம் நமக்குத் தெரியாதெ ன்று ஒதுங்கினால் எல்லோராலும் விசேஷமாய்க் கொண்டாடப் படுவார் என்று எண்ணுகிறேன்.

பிறகு சாஸ்திரம் அடிப்படையான கொள்கைகளை நிர்ண யிக்கவும் விவாதிக்கவும் உபயோக மென்கிறார். அடிப்படையென் றால் என்ன.

மதக்கிரந்தங்களில் எந்த ஒரு பிரபலஸ்தராவது தெய்வத் துக்கோ மனிதனுக்கோ அபசாரம் செய்ததாகச் சொல்லியிருந் தால் அதே மாதிரி நாமும் செய்ய வேண்டுமென்று அர்த்தமா வென்கிறார். நம்மதத்தை இவர் கொஞ்சங்கூடத் தெரிந்துகொ ள்ளவில்லையே. நம்மதக் கிரந்தங்களில் அப்படி ஓரிடத்திலும் இல்லை. வேறு மதத்திலிருந்து ஏதாவது தெரிந்து கொண்டா ரோ, ஒரு மதத்திலும் இவ்விதமிருக்க நியாயமில்லை. ஒரு சமயம் ராவணாதிகளைச் சொல்வோ மென்றால் அவர்கள் நடத்தை யால் தபஸ்ஸும் ஐசுவரியமும் ஏராளமாய்ப் பெற்றிருந்தும் தைவ மனுஷ்யாபசாரத்தாலழிந்தார்கள். ஆகையால் அவ்வழி யின் பற்றத் தக்கதல்லவென்று ஸாமான்ய மனிதனும் தெரிந்து கொண்டிருக்கிறானே அப்படியிருக்க காந்தி சொல்வதற்கு என்ன அர்த்தமோ

இந்த உலகில் ஸத்தியம் ஒன்றுதான் பிரதானம். அதைப் போதித்தால் போதும். யுதிஷ்டிரர்கூட ஸத்தியவழியிலிருந்து ஒருசமயம் தவறிவிட்டார் என்பதை ஆதாரமாகக்காட்டுவது அஸந்தர்ப்பமென்கிறார்.

ஸத்தியம் ஒன்றுதான் பிரதானம் என்ற ஒன்றைத் தான் நமது சாஸ்திரங்கள் போதிக்கின்றன. எல்லாப்புராணங்களும் ஸத்தியம் ஒன்றைத்தான் புகழவந்திருக்கின்றன. அப்படியிருக்க அதைப்போதித்தால் போதும் என்பதற்குஅர்த்தமே இல்லை. யுதிஷ்டிரர் அஸத்தியம் சொன்னதை ஒருஆஸ்திகனும்நியாயமென்று எடுத்துக்கொள்ளமாட்டான். ஸத்தியத்திலிருந்து கொஞ்சமேனும் வழுவினல் அவனுக்கு அனர்த்தம் விளையுமென்பதைத்தான் யாவரும் தெரிந்துகொண்டிருக்கின்றனர்.

பிறகு ஆதிசங்கரர் சண்டாளனை எட்டிப்போவென்று சொன்னதைப் பிரமாணமாக எடுத்துக்கொள்ளவேண்டாமென்கிறார். ஏன் எடுத்துக்கொள்ளவேண்டாமோ தெரியவில்லை. நம்முயிரைப் போல மற்றவர்களுடைய உயிரையும் பாதுகாக்கவேண்டுமென்று ஏன் பாவிக்கலாகாதென்று கேட்கிறார். சாஸ்திரம் அவ்விதம் தான் பிரகாசமாய்க் கூறுகிறதென்றும் அவ்விதம்தான் இக்காலத்தும் ஆஸ்திகர்கள் அனுஷ்டிக்கிறார்களென்றும் கூறுவோம். எல்லாப் பிராணிகளிடத்திலும் காருண்யத்துடன் நடந்துகொள்ளவேண்டுமென்று ஏன் கிரஹிக்கலாகாது என்று கேட்கிறார். எல்லாப் பிராணிகளிடத்திலும் பரமகாருண்யத்தை நம்மதஸ்தர்கள்போல் ஒருவரும் நடத்தமாட்டார்கள். காருண்யத்தையே பூஷணமாய்ப் பெற்றவர்கள் நாம் தான். ஆகையால் காருண்யத்துடன் நடந்துகொள்ளவேண்டுமென்பதைப் புதிதாக கிரஹிக்க வேண்டாம். ஆதிசங்கரர் சண்டாளனை எட்டிப்போவென்றதை கிரஹிக்கவேண்டாமாம். தீண்டாதவர்கள் நிரபராதிகள். நம்மைப்போல் மனிதர்கள் அப்படியிருக்க ஏன் தள்ளவேண்டும் என்கிறார். ஆகா! தீண்டாதவர்களும் நம்மைப்போல மனிதர்கள் தானும். இதை சங்கராசார்யார் தெரிந்துகொள்ளவில்லை. இந்த அதிசூக்ஷ்மத்தைக் காந்திதான் தெரிந்துகொண்டார். அதனல் தான் அவர்களை எட்டிப்போவென்று சொல்லலாகாதாம். சங்கராசார்யாவர்கள் இவ்விரண்டையும் தெரிந்துகொள்ளாததால்தான் விலகிப்போவென்றாற்போலும். ஆகையால் ஆதிசங்கரர் என்னவோ சொன்னாராம்.

(தொடரும்.)

M. .N சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

பீடிக்கப்பட்டிருந்தோம். இது நிற்க, எந்தக் காரணத்தினுல் பிலத்தினின்றும் தோன்றிய அக்கினியினுல் எல்லாவுலகங்களும் கொளுத்தப்பட்டன? இவை யாவும் சொல்லவேண்டும்" என்று கேட்க தேவி "இக்காரணங்களைப் பின்னர்க் கூறுகின்றேன்" என்று பிலத்தை விட்டு வெளியே வந்து நின்று "நீங்கள் இப்பொழுது இவ்விடத்தில் ஓர் பள்ளம் தோண்டி அதில் பிரேத ரூபமாயிருக்கின்ற இப்பந்தகனைப் புதைத்து ஜயஸ்தம்பம் நாட்டி அவ்விடத்தினின்றும் பிலாகாசத்துக்குப் போக ஓர் துவாரம் அமைத்து, அதற்கருகான தெற்கில் பிலத்தின் வெளி எவ்வளவு இருக்கின்றதோ அவ்வளவும் வேதங்களையே நாற்சதுரங்களாக அமைத்து, அதில் காயத்திரியினுடைய வர்ணங்களையே இருபத்து நான்கு கால்களாக நாட்டி, வியாக்ருதியாகிற மூன்று அக்ஷரங்களைமூன்று கண்டங்களாகச் செய்து, காயத்திரி மண்டபமென்றுபெயரிட்டு, அம்மண்டபத்துள் பிரணவத்தை மாணிக்கமயமான சிம்ஹாஸனமாக அமைத்து, அப்பீடத்தின் மேல் கன்னியா ரூபமாக இருக்கின்ற என்னைப் போல் ஒரு பிம்பப்பிரதிஷ்டைசெய்து ஷடாதாரங்களில் காணப்படும் ஷட்தரிசன ஸ்வரூபிணியாயும், நவாவரண மத்தியில் இருப்பவளாயும், பிலத்துக்கு அதிபதியாயுமிருக்கிற பராசக்தியை ஷடாம்நாயமென்கிற மந்திர முறையால் அந்தரியாக முறையின்படி அர்ச்சித்துப் பின் ஆவாகித்துப் பால் தயிர் தேன் இளநீர் முதலிய பல அபிஷேகத் திரவியங்களால் அபிஷேகித்துச் செந்நிறமுள்ள புஷ்பங்களாலும் அக்ஷதைகளாலும் தூபதீப நைவேத்திய ஆர்த்தி ஜபமென்கிற பஞ்சோபசாரங்களால் விதிப்படி ஆராதித்து, சுகந்த சம்பந்தமாயுள்ள சகல திரவியங்களால் லேபனம் செய்து, பிலத்துவாரத்தில் கொடுக்க வேண்டிய பலிகளும் கொடுத்து, கதவை மூடிவிட்டு வெளியேயிருந்து சூரியோதயமாகுமளவும் மௌனமாயிருந்து என்னைத் தியானித்து ஸ்ரீ வித்தியா மந்திரத்தை ஜபித்து ஜபசமர்ப்பணை செய்து உதயமானவுடன் கதவைத் திறந்து என்னைத் தரிசனம் செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறுகின்றேன். அதுவரையில் என்னை யொன்றும் கேட்க வேண்டாம்" என்றனள்.

அதுகேட்ட தேவர்கள் வணங்கித் தேவி கட்டளை யிட்ட வண்ணம் பந்தகனைப் புதைத்து வெற்றிக் கொடியாகத் துவஜ

ஸ்தம்பத்தை நாட்டி காயத்திரி மண்டபப் பிரதிஷ்டையும், அதன் பின் செய்யவேண்டிய பூஜையையும் அர்த்த ராத்திரியில் செய்து கதவை மூடி அருணோதயம் வரையில் மந்திரத்தை ஜபித்திருந்து, பின் அருணோதய காலத்தில் ஆசாரத்தோடு கூடினவர்களாய்க் கதவைத் திறந்து பார்க்கும் பொழுது தாங்கள் பிரதிஷ்டை செய்திருந்த விக்கிரகத்தைக் காணாமல் ராஜராஜேச்வரியாகிய திரிபுர சுந்தரி நிஜரூபத்தோடும் ஆவிர்ப்பவித்திருப்பதைக் கண்டனர்.

அந்த ஆவிர்ப்பாவ காலமாவது சாவித்திரி கல்பம் சுவாயம்பு மனுவினுடைய தாமசகாலம்· கிருதயுக ஆரம்பம் விஷ்ணு மோகினியுருவங்கொண்ட சமயம் ஸ்ரீ முகவருஷம் சூரியன் கும்பத்திலிருக்கின்ற பால்குனமென்கிற பங்குனி மாஸம் கிருஷ்ணபக்ஷம் பிரதமைதிதி பூர நக்ஷத்திரத்தின் மத்தியகாலம் ஐந்தாம் ஜாமம் சுக்கிரவாரம் உதயகாலம்.

அந்தச் சுபதினத்தில் காணப்பட்ட ராஜ ராஜேச்வரியை தரிசித்து, இதுவென்ன ஆச்சரியமென்று தேவியினுடைய சரித்திரம் மிகவற்புதமென்றும், "ஹே, ஜயதேவி, ஜகன்மாத: திரிபுர சுந்தரி," என்றும் ஸ்தோத்திரம் செய்து நமஸ்கரித்து, "நாங்கள் பிரதிஷ்டை செய்து பூஜித்த அம்பிகை எங்கே? பந்தகாசுரனைக் கொன்று அவனைக்கொண்டுவந்து பிலத்தருகே நின்ற கன்னியாரூபமெங்கே? அந்த இரண்டு ஸ்வரூபங்களையும் காண்கிலோம்· இப்பொழுது உன்னைத் தான் காண்கிறோம். நீ யாரோ அறியோம்? எங்களுக்கு அந்தக் காரணங்களைக் கிருபையோடு சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, திரிபுரசுந்தரி "ஓ தேவர்களே, நான் அந்தக்காரணங்களைச் சொல்லுகிறேன். சாவதானமாய் கேளுங்கள்" என்று சொல்லத் தொடங்கினள்.

"ஓ, தேவர்களே உங்களுடைய ஹிதத்தின் பொருட்டுப் பிரளய காலாக்கினி ஸ்வரூபமாய் அர்த்த ராத்திரியில் இந்தப் பிலத்தினின்றும் வெளிப்பட்டுச் சர்வஜகத்தையும் பஸ்மீகரம் செய்து ககார, அகார மகார ஸ்வரூபிகளென்று சொல்லப்பட்ட பிரும்ம விஷ்ணு உருத்திரர்களைச் சிருஷ்டியாதி தொழில்களை யுத்தேசித்து என்னுடைய மூன்று கண்களினின்றும் உண்டாக்கி, திரிபுரசுந்தரியாகிய நான் காமாக்ஷி என்கிற பெயர் பெற்றேன்.

அந்தத்திரிமூர்த்திகளும் தங்கட்குரிய தொழில்களைச்செய்ய உத்தேசித்துப் பிரமன் சிருஷ்டி செய்த பொழுது, உங்கள் பகை வனாகிய பந்தகாசுரன் முன்போல் தோன்றினான். அதைக் கண்ட நான் பைரவ ரூபங்கொண்டு, அந்தப் பந்தகனைக் கொன்று அவு னது பந்துமித்திரர்களையும் நாசம் செய்து பிரேதமாய்ப் போன பந்தகனைச் சிகை பிடித்து இழுத்துக்கொண்டு கண்டார் பயப் படத்தக்க என்னுடைய பைரவ ரூபத்தை மாற்றிக் கன்னியா ரூபம் கொண்டு மஹாபிலத்தினின்றும் வெளிப்பட்டு நீங்கள் காணுமாறு வந்தேன். வந்த என் கையில் பந்தகன் பிரேதமாயி ருந்தும் நீங்கள் கண்டு பயந்தபடியால் அந்தப்பய நிவர்த்தியின் பொருட்டும், பயநிவர்த்தி செய்வதில் வெற்றியுடையவள் யான் என்பதும் யாவரும் அறியும் பொருட்டும் அவனைப் புதைத்து ஜய ஸ்தம்பம் நாட்டும்படி உங்கட்குக் கட்டளையிட்டேன். நீங்கள் என்னைப் புகழ்ந்து ஸ்தோத்திரம் செய்து அன்பு பாராட்டிய படி யால் இந்தப் பிலத்தைக் காயத்திரி மண்டபத்தில் மறைத்து ஓம் கார சிம்மாசனம் அமைத்து, அதில் என்னைப் பிரதிஷ்டை செய் யுங்கள் என்று விதித்தேன். அது போலவே நீங்கள் செய்தபடி யால் நீங்கள் அனைவரும் ஆச்சரியானந்த சாகரத்தில் மூழ்கும்நிமி த்தமும் உங்கள் இஷ்டார்த்த சித்தியின் பொருட்டும், சித்ஸ்வ ரூபமாகியபிலாகாசத்துள்ளே வசிக்கின்ற திரிபுரசுந்தரியாகிய நான் அதை விட்டு நீங்கள் பிரதிஷ்டை செய்த பிம்பத்தில் இப்பொழுது பிரகாசிக்கின்றேன்.

இனி நான் இந்தத் திவ்யமாகிய மண்டபத்தில் நீங்காது எப்பொழுதும் இருப்பேன். இந்த இடம் தான் மேலானது. இது தான் எனக்கிடம். இது தான் அழிவில்லாதது. எக்காலத் தும் அழிவில்லாத காரணத்தால் இது பிரளயஜித்தெனப் பெயர் பெற்றிருக்கின்றது என்று திரிபுரசுந்தரியாகிய தேவி சொன்ன தைத் தேவர்கள் கேட்டு, நமஸ்காரம் செய்து ஆராதித்து அத்தே விக்குப் பிலம் உள்ளிடமாயிருப்பதால் அந்தப் பிலத்துவாரத் திற்கும் நீராஞ்சனம் முதலிய உபசாரங்கள் செய்து பின்னர் அத் தேவியை அந்தணர்களுடைய ஹிருதயத்திலிருப்பவளாகத் தியா னித்து, அநேக விதமான பக்ஷியவகைகளோடுகூடிய அறுசுவை யுணவுகளையுண்ணும்படிச் செய்தலாகிய சமாராதனை செய்து,

அவர்களுக்கெல்லாம் நல்ல சுகந்தமாகிய சந்தனம், புஷ்பமாலை, வஸ்திரங்கள், ஆபரணங்கள் முதலான இவைகளெல்லாம் இரண்டு பங்காகக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிப்பித்து, யாவும் தேவிக்கே அர்ப்பணம் என்று சொல்லி, ஸ்தோத்திர வகைகளால் அம்பிகையைத் திருப்தி செய்வித்தனர்.

அதன் பின்னர் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்ற பரமேச்வரிக்குப் பட்டாபிஷேக உத்ஸவம் செய்யவேண்டுமென்றெண்ணித் தேவசிப்பி பல்லக்கையும், பிரமன் முத்துக் கொடையையும், விஷ்ணு விருத்தாகாரமாயுள்ள நவரத்ன மகுடமும், ருத்திர மூர்த்தி ஸ்ரீசக்ரமென்னும் பதக்கமும்கொடுக்க, தேவர்கள் அலங்காரம்செய்து அன்று மாலைக்காலம் மஹோற்சவமாய் எழுந்தருளிவரச் செய்து, முன்போல் பீடத்தில் அம்பிகையை ஸ்தாபனம் செய்து, "ஹே, தேவி, இக்காஞ்சியில் ஸான்னித்தியமாயிருக்க வேண்டும்" என்று பிரார்த்திக்க அம்பிகை நான் க்ஷீரசமுத்திரத்திலிருக்கும் ஸ்ரீபுரத்தில் எவ்வாறு சாமர்த்திய ரூபிணியாய், சக்தி என்கிற பெயருடையவளாய் இருக்கின்றேனோ அவ்வாறே இவ்விடத்தில் காமாக்ஷி என்னும் பெயருடன் சந்தானுதி வரங்களைத்தருபவளாய் வசித்திருக்கின்றேன். ஆகையால் நீங்கள் என்னை நாடோறும் தரிசித்து வாருங்கள். ஸ்ரீபுரத்தைக் காட்டிலும் இது அதிகம் என்று யாவருக்கும் ஆக்ஞை செய்ய உருத்திரர் முதலிய யாவரும் மிகவும் சந்தோஷிததவர்களாய் ஸ்தோத்திர நமஸ்காராதிகள் செய்து, எவர் அம்பிகை யுற்பத்தியான தினத்தில் பூஜிக்கின்றார்களோ அவர்கள் கோடி யக்ஞபலத்தையடைவார்களென்று அனுக்கிரகித்து மறைந்து போயினர்.

பின்னர் உருத்திர மூர்த்தி தூர்வாசராய் அனேக சீடர்களுடன் கூடி, உள்ளே பிரவேசித்து விசுவாமித்திரர், கௌதமர், காசியபர், அத்திரி, பரத்துவாஜர், அகஸ்தியர் முதலானவர்களையும் அவர்களுடைய புத்திரர்களையும், பஸ்மமும், பவளத்தினற்செய்த மேருவோடு கூடிய ஸ்வர்ண ருத்திராக்ஷமும், ஸௌபாக்கியமான குங்குமமும் தேவி ஆக்ஞையினல் தரித்துக் கொள்ளும்படிச் செய்துப் பிரம்மகல்பபரியந்தம் சிந்தாமணி என்கிற தந்திரப்படி அம்பிகையைப் பூஜித்து வரும்படி ஆக்ஞாபித்து "நான் இக்கிருதயுகத்தில்தூர்வாஸமகரிஷியையும்,திரேதாயுகத்தில் பரசுராமரையும்,